**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 40/2018 P.W.6/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | டாக்டர். திரு. சேவியர் கிறிஸ்து ராஜன் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** 10.06.2026

**சாட்சி நாமக்கல் மாவட்ட நீதிமன்ற வளாகத்திலிருந்து காணொலி மூலம் சாட்சியம் அளிக்கிறார்.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இணை பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் நான் கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் 12.07.2011 பணியில் இருந்த பொழுது அன்று இரவு 08.10 மணியளவில் ரவி என்பவரை அவரது சகோதரர் ராஜன் என்பவர் காயசிகிச்சைக்காக அழைத்து வந்தார்.

2. அவர் தன்னை அடையாளம் தெரிந்த 3 நபர்கள் 12.07.2011–ம் தேதியன்று மாலை 05.40 மணியளவில் பத்தரை என்ற இடத்தில் வைத்து அரிவாளால் தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதிக்கும் போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

**காயம் 1.** இடது தோள்பட்டையில் கிழிந்த காயம் 2x1 cm அளவில் காணப்பட்டது.

**காயம் 2.** இடது கையில் கிழிந்த காயம் 3x1 cm அளவில் காணப்பட்டது.

**காயம் 3.** இடது கை கட்டைவிரலில் கிழிந்த காயம் 6x3 cm அளவில் காணப்பட்டது. அதில் எலும்பு வெளியே தெரியும் அளவிற்கு காயம் இருந்தது.

**காயம் 4.** இடது முன்கையில் கிழிந்த காயம் 10x6 cm அளவில் காணப்பட்டது. அதில் தசை மற்றும் தசை நார் வெளியே தெரியும் அளவிற்கு காயம் இருந்தது.

3. அவரை நான் சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்தேன். அவர் 28.07.2013–ம் தேதி விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் 1 மற்றும் 2 ஆகியவற்றை சிறுகாயம் என்றும் காயம் 3 மற்றும் 4 ஆகிய காயங்கள் குறித்து Plastic Surgery மருத்துவரிடம் சிகிச்சைக்கு அனுப்பபட்டு அவரது கருத்துரையின் அடிப்படையில் கொடுங்காயம் என்று சான்று கொடுத்தேன். **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

1. காயம் 1 மற்றும் 2 ஆகிய காயங்கள் சாதாரணமாக ஒரு கரடு முரடான இடத்தில் கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால், சரிதான். காயம் 3 மற்றும் 4 ஆகிய காயங்கள் கரடு முரடான பகுதியில் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால், சரியல்ல. அவைகள் கூர்மையான ஆயுதத்தில் அதிவேகமாக மோதினால் அந்த வெட்டுக் காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

2. நான் பரிசோதனை செய்யும் பொழுது காயத்தில் ரத்தம் வடிந்துக் கொண்டிருந்தது என்றால், சரிதான். அரிவாளை கொண்டு வெட்டினால் காயம் 1 முதல் காயம் 4 வரையான காயங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால், காயம் 1 மற்றும் 2 காயங்கள் ஏற்பட குறைவான வாய்ப்பு உள்ளது. ஆனால் காயம் 3 மற்றும் 4 காயங்கள் ஏற்பட சாத்தியங்கள் அதிகம் உள்ளது.

3. காயம்பட்ட நபருக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டதா என்றால், மேல்சிகிச்சையின் பொழுது எடுக்கப்பட்டிருக்கலாம்.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

<u>**மறுவிசாரணை:**</u>

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.